The Scarborough Hospital

Rouge Valley HEALTH SYSTEM

**செய்தி வெளியீடு**

**வைத்தியசாலைகள் இணைவது தொடர்பாகத் தொலைபேசி நகர மண்டபங்ளுக்குச் சமூகத்தவர் அழைக்கப்படுகின்றனர்**

February 11, 2014 றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பும் (RVHS) ஸ்காபரோ வைத்தியசாலையும்(TSH) வைத்தியசாலைகள் இணைவது தொடர்பாகத் தொலைபேசி நகர மண்டபங்ளுக்குச் சமூகத்தவரை அழைக்கின்றன. இரண்டாவது முறையான இந்தக் கருத்துப் பரிமாற்றச் சந்திப்பில் பிரேரிக்கப்பட்ட வைத்தியசாலைகளின் இணைவுபற்றிய தற்போதைய நிலமையை அறிவிப்பதோடு சமூக மக்களின் அபிப்பிராயங்களும் கேட்டறியப்படும்.

அழைப்பில் இணைவதை உறுதிசெய்தற்கு சமூக உறுப்பினர் தங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் www.leadingforpatients.ca. என்னும் மின்னம்பலத்தில் முன்கூட்டியே பதிவு செய்தல் வெண்டும். அப்படிச் செய்பவர்கள் நகர மண்டப தொலைபேசி உரையாடலுக்குரிய தொலைபேசி அழைப்பினைப் பெறுவர்.

இத் தொலைபேசித் தொழில்நுட்பம் ஆயிரக்கணக்கானவரைப் பங்குகொள்ள வைக்கும். 2013 இலையுதிர் பருவத்தில் நடந்த தொலைபேசி உரையாடலில் எல்லாமாக 16,000 பேர் பங்குபற்றிப் பெறுமதியான கருத்துக்களை முன்வைத்தனர்.

‘எமது வைத்தியசாலைகள் சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்துவதையும் நோயாளர் நலனையே முதலாகக் கொள்வதையும் நோக்காகக்கொண்டு பணிசெய்கின்றன,’ என்றும் ‘ தொலைபேசி நகர மண்டபங்கள் அதிக மக்களின் கருத்துக்களைப் பெற பெரும் வாய்ப்பை அளிக்கின்றன’ என்றும் RVHS தலைவரும் CEO வுமான Rik Ganderton கூறினார்.

‘இவ்விதமான முறையால் எமது சமூக மக்களை எமது வெளிப்படையான கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுத்தக்கூடியதாக இருக்கிறது. ஓவ்வொரு வரையும் இதில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிள்றோம். அவர்களின் கருத்துக்கள் பெறுமதியானவையும் முக்கியமானவையுமாகும்’ என்று TSH தலைவரும் CEO வுமான Robert Biron குறிப்பிட்டார்.

இரண்டு CEO மாருடனும் RVHS Chief of Staff Dr. Naresh Mohan அவர்களும் TSH Chief of Staff Dr. Tom Chan அவர்களும் தொலைபேசி நகர மண்டபங்களில் சேர்ந்துகொள்வர்.

**தொலைபேசி நகர மண்டபங்கள்: பெப்பிரவரி 26, 27ம் மார்ச் 5ம்**

பங்குபற்றுகின்றவர் பின்வரும் மூன்று தொலைபேசி நகர மண்டபங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம்:

- புதன்கிழமை, பெப்பிரவரி 26 - 7:00 pm;
- வியாழக்கிழமை, பெப்பிரவரி 27 - 7:55pm;
- புதன்கிழமை, மார்ச் 5 - 7:05 pm.

கருத்துப்பரிமாற்ற விடயங்கள் எல்லாத் தொலைபேசி நகர மண்டபங்களிலும் ஒரேமாதிரியாகவே இருக்கும் என்பதனைத் தயவுசெய்து கவனிக்க.

நடத்துநர் பங்குபற்றுகின்றவரைக் கேள்விகள் கேட்பார். கருத்துக்கள் பதிவுசெய்யப்படும். பங்குபற்றுவோர் தொலைபேசி முகப்பில் உள்ள இலக்கம் ஒன்றை அழுத்தி விடையளிக்கலாம். அவர்கள் வைத்தியசாலைத் தலைவர்களிடம் கேள்விகளும் கேட்கலாம்; தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கலாம்.

**பின்னணி**

இணைக்கப்பட்ட வைத்தியசாலைக் கூட்டுத்தாபனத்தின் நன்மைகளாவன:

- மேம்பட்ட சுகாதாரக் கவனிப்பும் மேம்பட்ட தரமும். இதன் பொருளாவது:
    - ஸ்காபரோவிலும் மேற்கு டூறாமிலும் அதிக சிகிச்சை நிபுணத்துவம் கிடைத்தல்.
    - எமது சமூகத்துக்கு வெளியே சிகிச்சைபெற்றுவரும் நோயாளிகளை உள்ளக வைத்தியசாலைகளுக்கு இடம் மாற்றுதல்.
    - வைத்தியசாலையின் நான்கு வளாகங்கள் வாயிலாகவும் சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக மேலதிக மருத்துவ நிபுணர்களைப் பெறுதல்.
    - வைத்தியசாலைகள் மத்தியிலும் சமூகசேவையாளர் மற்றும் பராமரிப்பு நிலையங்களுடனும் மேம்பட்ட தொடர்பாக் கங்களையும் சேவைப் பரிமாற்றங்களையும் செய்தல்.
    - அதிக சிறப்புச்சேவை நிலையங்களையும் வருங்காலப் பிராந்திய சேவைத் திட்டங்களையும் உருவாக்குதல்.
    - நாளாந்தக் கவனிப்புகளுக்குரிய நடமாடும் சிகிச்சை நிலையங்களை நிறுவுதல்.
- இணைவதால் ஏற்படும் நன்மைகளை ஒரு நீண்ட காலப்போக்கில் உணரலாம். அப்பொழுது வைத்தியசாலைகள் சமூகங்களுக்குச்

சிறப்பாகச் சேவை செய்யத்தக்க நிலைமையில் இருக்கும்; ஒரு மாற்றம்பெற்ற சுகாதார சேவைக்கான முறையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உருவாக்கும்; நிதிச் சவால்களை ஒன்றாகச் சமாளிக்கும்; வேகமாக மாறிவரும் சுகாதார சேவைச் சூழலைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தும்.

- புதிய வைத்தியசாலைக் கூட்டுத்தாபனம் அதிக நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும். மாகாணத்தின் நோயாளர் அடிப்படையில் வழங்கப்படும் நிதித் திட்டத்தை நன்கு பயன்படுத்தும் நிலையில் இருக்கும். சிறந்துவரும் தகைமையிலும் திறத்திலும் அதிக கவனம் செலுத்தும்.

மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து www.leadingforpatients.ca என்னும் மின்னம்பலத்தைக் காண்க.

-30-

றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.
றூஷ்வலி வைத்தியசாலை இரண்டு சமூக வைத்திய வளாகங்களான ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு றூராமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங்கில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது.
கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/ பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது.
TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது.
ரோறன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்திய சாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

ஊடகத் தொடர்பு:

David Brazeau,
Director, Public Affairs, Community Relations and Telecommunications
Rouge Valley Health System
647-294-8885
dbrazeau@rougevalley.ca

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital
416-438-2911, ext. 8308
hocampbell@tsh.to